C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 18 JANUARY 2026 ஆகாரம் : 01

*நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.*

*ஏசாயா 41:10*

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 17 DECEMBER 2025 ஆகாரம் : 11

ஆதியிலே வார்த்தை இருந்தது

**அந்த வார்த்தை மாம்சமாகி**

கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்.

யோவான் 1:1

In the beginning was **the Word, and the Word was with God** and the Word was God.

John 1:1



# Tentative
# YEARLY PLAN - 2026

**03 Jan '26** — Saturday
6:30pm - 07:00pm
**CBS START DATE / TERM 1**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**15 Feb '26** — Sunday
6:30am
**CHURCH PICNIC**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**18 Feb '26** — Wednesday
7:30pm - 09:30pm
**ASH WEDNESDAY SERVICE**
**40 DAYS LENT DAILY SERVICE**
Kanad hospital Majlis - Al Ain

**08 Mar '26** — Saturday
7:30pm - 09:30pm
**WOMENS FELLOWSHIP SPECIAL SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**16-29 Mar '26** — Sunday
TBD
**VACATION BIBLE SCHOOL**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**29 Mar '26** — Sunday
7:30pm - 10:30pm
**PALM SUNDAY SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**02 Mar '26** — Saturday
7:30pm - 09:30pm
**MAUNDY THURSDAY**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**03 Apr '26** — Friday
7:30pm - 09:30pm
**GOOD FRIDAY**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**05 Apr '26** — Sunday
7:30pm - 09:30pm
**EASTER SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**25 Apr '26** — Saturday
9:30pm
**ANNUAL GENERAL BODY MEETING**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**26 Apr '26** — Sunday
TBD
**CAMP MINISTRY RETREAT & SHARING & CARING**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**02 May '26** — Saturday
9:30pm
**BIBLE QUIZ CONTEST / ADULTS**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**31 May '26** — Sunday
10:30am - 02:30pm
**MINISTRY RETREAT**
Kanad hospital Majlis - Al Ain

**30 MAY 06 JUNE** — Saturday
6:30pm - 07:30pm
**CBS 1ST TERM EXAM**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**06 JUNE 13 JUNE** — Saturday
7:30pm - 09:30pm
**CBS SPECIAL SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**08 Aug '26** — Saturday
7:30pm - 09:30pm
**YOUTH FELLOWSHIP SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**30 Aug '26** — Sunday
10:30am - 02:30pm
**MINISTRY LEADERS RETREAT SERVICE**
Kanad hospital Majlis - Al Ain

**05 Sep '26** — Saturday
6:30pm - 07:15pm
**CBS RE-OPEN / TERM 2**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**12 Sep '26** — Saturday
7:30pm - 09:30pm
**CHAMPIONS FOR CHRIST 2026 CBS EVENT**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**07 Nov '26** — Saturday
4:30pm - 09:30pm
**HARVEST FESTIVAL**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain




**அன்பிற்கினியர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் புத்தாண்டு 2026 இன் நல்வாழ்த்துக்கள்.**

ஜனவரி நான்காம் தேதி உலக பார்வையற்றோர் தினம் **(WORLD BRAILLE DAY)** என கடைபிடிக்கப்படுகிறது. லூயி பிரெய்லி **(LOUIS BRAILLE)** என்பவர் பிரான்சில் ஜனவரி நான்காம் தேதி 1809 இல் பிறந்தார். கைப்பைகள், பணப்பைகள், காலனிகள் போன்ற தோல் பொருட்களைத் தைத்து விற்பனை செய்து குடும்பத்தை நடத்தி வந்தார் இவரது தந்தை சைமன் ரெனே ஆவார். பிரெய்லி தனது மூன்று வயதில் துருதுருவென இருந்து, தனது மூன்று வயதில் தோல் தைக்கின்ற ஊசியை எடுத்து தனது ஒரு கண்ணில் குத்திக் கொண்டார். அதற்கு சரியான மருத்துவ சிகிச்சையின்றி தன் ஒரு கண் பார்வை இழந்தார், தொடர்ந்து அதன் பாதிப்பினால் மற்றொரு கண் பார்வையும் இழந்து,தனது நான்கு வயதில் இரு விழிகளையும் இழந்தார். அந்தச் சமயத்தில் அவரின் தாயாரின் கண்ணீர் பிற்காலத்தில் உலகமே வியந்து நிற்கப் போகிறது என்று அவர்களுக்கே தெரிந்திருக்காது. அதுதான் உலகம் முழுமையிலும் இருக்கின்ற பார்வையற்றோருக்கான கல்வி முறைமையான "ப்ரெய்லி" கல்வி முறைமை ஆகும். அதனைக் கண்டுபிடித்தவர் லூயி பிரெய்லி ஆவார், அவரை உலகமே போற்றுகின்றது. அவரை கௌரவப்படுத்த இந்திய அரசும் அவரது உருவம் பதித்த இரண்டு ரூபாய் நாணயத்தை வெளியிட்டுள்ளது.

அன்பிற்கினியவர்களே, தனது இரு விழிகளையும் இழந்த லூயி பிரெய்லி தன்னம்பிக்கையோடு உலகத்தில் பார்வையற்ற மக்களுக்கு கல்வி ஒளியை தந்துள்ளார். நானே உலகிற்கு ஒளி, என்று நமக்காக பிறந்த ஆண்டவர் இயேசு நம்மை பார்த்து சொல்லுகிற வார்த்தை "பயப்படாதே" என்பதே. ஆண்டவராகிய கர்த்தர் அன்றைக்கு இஸ்ரவேல் மக்களை பார்த்து கூறியது நான் தெரிந்து கொண்ட இனமே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே (ஏசாயா 41:10) நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன் என்பதுவே.

## தாங்குகிறவர்:

என் மகனே, மகளே நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்.திகையாதே,நான் உன் ஆண்டவர் உன்னை பலப்படுத்தி, உனக்கு சகாயம் பண்ணுவேன், உன்னை தாங்குவேன் என்று கர்த்தர் கூறுகிறார் (ஏசாயா 41:10) நம்முடன் இருக்கவே பிறந்த ஆண்டவர் இயேசு, அவர் இம்மானுவேலர் அவரின் துணையோடு இந்த ஆண்டின் தொடக்க முதல் நிறைவு வரையிலும் மகிழ்வோடு, மனநிறைவோடு பயமின்றி பயணிப்போம்.

## துணை நிற்கிறவர்:

நம் ஒவ்வொருவரின் வலது கையையும் பிடித்து பயப்படாதே மகனே, மகளே நான் உனக்கு துணையாக இருக்கிறேன் என்று வழிநடத்துகின்ற, ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் அவரின் துணையோடு இந்த ஆண்டில் திகையாமல், கலங்காமல் பயணிப்போம் ஆண்டவர் நிறைவாக வழிநடத்துவார்.


## மீட்பரானவர்:

பயப்படாதே நான் உனக்குத் துணையாக இருக்கிறேன் என்று கூறுகின்ற கர்த்தர் நமது மீட்பர் ஆவார். மீட்பர் என்பதற்கான எபிரேய வார்த்தை கோயல் **(GOYAL)** என்பதாகும். இதற்கான தமிழ் விளக்கம் நெருக்கமான உறவை சார்ந்தவர் தருகின்ற மீட்பு அல்லது விடுதலை ஆகும். அன்பிற்கினியவர்களே, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் கூட நமக்குத் தாயும் தந்தையுமாக **(PARENT GOD)** இருக்கின்ற கடவுளாக, நமக்கு விடுதலை தந்த மீட்பர் ஆவார். அதனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருக்கரம் பற்றிப் பிடித்து பயணிப்போம், இந்தப் புதிய ஆண்டில் நம்மை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan




**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.**

19ஆம் நூற்றாண்டுக்கு முன் பிஜி தீவு **(FIJI ISLAND)** "நர மாமிசம் உண்ணும் தீவு" **(CANNIBAL ISLES)** என்றே அழைக்கப்பட்டது. அங்கு எதிரிகளைக் கொன்று உண்ணும் வழக்கம் மிகக் கடுமையாக இருந்தது.

ஜேம்ஸ் கால்வர்ட் **(JAMES CALVERT)**, ஜான் ஹன்ட் **(JOHN HUNT)** போன்ற கிறிஸ்தவ மிஷனரிகள் அங்கே சென்ற பிறகுதான் அந்த பழக்கம் முழுமையாக மாறியது. எனவே, "பைபிள் இல்லையென்றால், நீங்கள் உணவாகி இருப்பீர்கள்" என்ற வாதம் வரலாற்று ரீதியாக அந்தச் சூழலுக்குப் பொருத்தமானது. ஒருமுறை ஒரு பிரெஞ்சு நாத்திகர் பிஜி தீவுக்கு சென்றார். அங்கே ஒரு பழங்குடி இனத் தலைவர் பைபிளைப் படித்துக் கொண்டிருந்தார்.அதைப் பார்த்த அந்த வெள்ளையர், "நாங்கள் எல்லாம் என்றைக்கோ இந்தப் புத்தகத்தை பொய் என்று தூக்கி எறிந்து விட்டோம். நீங்கள் இன்னும் இதை படித்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று ஏளனமாகக் கேட்டார். அதற்கு அந்தத் தலைவர், அருகில் இருந்த ஒரு பாறை மற்றும் பெரிய அடுப்பை காட்டி, "நண்பரே, இந்த பைபிள் மட்டும் எங்களிடம் வராமல் இருந்திருந்தால், இந்நேரம் நீங்கள் இந்தப் பாறையில் மண்டை உடைக்கப்பட்டு, அந்த அடுப்பில் வெந்து கொண்டு இருந்திருப்பீர்கள். இந்தப் புத்தகம் என் கையில் இருப்பதால்தான், நீங்கள் இப்போது உயிருடன் என் கண் முன் நிற்கிறீர்கள்.அதற்காக நன்றி சொல்லுங்கள்" என்று பதில் அளித்தாராம்

.

பிரியமானவர்களே, வார்த்தை மனுஉரு ஏற்று நம்மிடையே மனிதராகப் பிறந்தார், அவர் வழியாக மீட்பை பெற்று, வாழ்வடைந்துள்ளோம். இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துவோம்.

**வாசம்செய்பவர்:**

படைப்புகள் அனைத்தையும் நேர்த்தியாக முடித்தக் கடவுள் மகுடமாக மனிதரைத் தம் சாயலில் படைத்தார். மனக்குலத்தின் கீழ்ப்படியாமையின் விளைவு, கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே மாபெரும் பிரிவை, பிளவை ஏற்படுத்தியது. இதனைச் சரிப்படுத்தவே கடவுள் மனிதனானார், அவர் நம்மிடையே வாசம் செய்தார் (யோவான் 1:14). ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமது உள்ளத்திலும், இல்லத்திலும் பிறப்பதுவே மெய்யான கிறிஸ்துமஸ், சிந்திப்போம்.

**நம்மோடு இருப்பவர்:**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மோடு இருக்கிறவர், அவர் இம்மானுவேல் (மத்தேயு 1:23). நம்மோடு தாயும், தந்தையுமாக இருந்து, முக்காலத்தும் நம்மை வழி நடத்துகின்றவர். எண்ணிலடங்காத வல்லச் செயல்களை நம்மிலும் நம் குடும்பங்களிலும் செய்கின்றவர். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்பது அதிசயமானது, வல்லமையுள்ளது, சமாதானத்தைத் தரவல்லது (ஏசாயா 9:6). அந்த ஆண்டவர் இயேசுவின் திருப்பாதம் பணிந்து, மகிழ்ந்துக் கொண்டாடுவோம்.

திருவார்த்தையான ஆண்டவர் இயேசு மண்ணிலே பிறந்ததினாலே உலகம் அனைத்திற்கும் மீட்பும், மகிழ்ச்சியும், அமைதியும் உண்டானது. இதனை நம் வாழ்வில் அனுபவித்து கொண்டாடுவோம் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

# இரக்கமுடையவர்

## (ரெபெக்காள்)

**(ஆதியாகமம் 24)**



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

ஆபிரகாம் தனது ஊழியக்காரரான எலியேசரை அழைத்து என் மகனுக்கு கானானில் பெண் கொள்ள வேண்டாம் என்றும், என் தேசத்திற்கு போய் பெண் கொள் என்றும் கட்டளையிட்டார். அப்படியே ஆபிரகாமின் ஊழியர் சில நிபந்தனைகளோடு பயணப்படுகிறார் (ஆதி24:13,14) இந்தத் துரவண்டையில் யார் எனக்கும், என் ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் கொடுக்கிறாளோ அவளே என் எஜமானனுக்கு ஏற்ற துணை என்று ஆண்டவரிடம் வேண்டுதல் செய்திருந்தார். அவர் இப்படி சொல்லி முடிக்கும் போது,ரெபெக்காள் தண்ணீர் துரவில் இருந்து தண்ணீர் கொண்டு வந்தாள். அப்போது அந்த ஊழியர் ரெபேக்காளிடம் சென்று தண்ணீர் குடிக்க தனக்கு தர வேண்டும் என்றார். ரெபேக்காளும் குடத்தில் இருந்து தண்ணீர் கொடுத்தாள், அது மட்டுமின்றி அந்த ஊழியரின் 10 ஓட்டங்களுக்கும் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினால் ஒரு ஒட்டகம் 10 குடம் தண்ணீர் குடிக்கும் பத்து ஒட்டகங்களுக்கும் சோர்ந்து போகாமல், சலித்துக் கொள்ளாமல் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினாள். பின்னர் அந்த ஊழியர் ரெபேக்காளிடம் நீ யார் எனக் கேட்க, அதற்கு ரெபேக்காள் நான் பெத்துவேலின் மகள் என்றும், லாபனின் சகோதரி என்றும் பதில் உரைத்தாள்.

அதன்பின்னர் எலியேசர் இவற்றைக் கேட்டு,அவரின் செயலைப் பார்த்து ஆச்சரியப்பட்டு வெகுமதிகளைக் கொடுத்து இரவுத் தங்க இடம் உண்டா என்று கேட்டார். அதற்கு ரெபேக்காள் தங்களுக்கும் தங்களின் கால்நடைகளுக்கும் இடம் உண்டு

அதன்பின்னர் எலியேசர் இவற்றைக் கேட்டு, அவரின் செயலைப் பார்த்து ஆச்சரியப்பட்டு வெகுமதிகளைக் கொடுத்து இரவுத் தங்க இடம் உண்டா என்று கேட்டார். அதற்கு ரெபேக்காள் தங்களுக்கும் தங்களின் கால்நடைகளுக்கும் இடம் உண்டு வாருங்கள் என்று நல்ல குணசாலியான பெண்ணாகத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

அப்படியே அவர்கள் வீட்டுக்குச் சென்று, ரெபெக்காளின் தந்தை, சகோதரன் மற்றும் குடும்பத்தாரின் அன்பின் உபசரிப்போடு அங்கே ஆபிரகாமின் ஊழியரான எலியேசர் தங்கினார். இதனைத் தொடர்ந்து ரெபெக்காளின் தந்தை பெத்துவேலும், சகோதரன் லாபனும் இணைந்து "இந்த காரியம் கர்த்தரால் வந்தது" (ஆதி24:50) என்றனர். தொடர்ந்து அவர்களின் வாழ்த்துக்களுடன் ஈசாக்குக்குத் திருமணம் செய்ய ரெபெக்காளை அனுப்பி வைக்கின்றார்கள்.

ரெபெக்காளிடம் அநேக நல்ல குணங்களை பார்க்க முடிகிறது. ஆபிரகாம், ஈசாக்கு ஆகிய இவர்களை முன்பு பார்த்திராத ரெபெக்காள், ஆபிரகாமின் ஊழியருக்கும், அவரின் 10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் காட்டின அவருடைய இரக்க குணத்தையும், அவரின் பரிவு, அன்பு ஆகிய நல்ல குணங்களையும் ரெபெக்காளிடம் காண முடிகிறது. ஆபிரகாம், ஈசாக்கு என்பவர்கள் யார் என்று தெரியாது. ஆனால் ஈசாக்கைத் திருமணம் செய்து கொள்ள தனது குடும்பத்தினருடைய

வாழ்த்துக்களின்படி, ஆபிரகாமின் ஊழியருடன் செல்வதால் ரெபெக்காளின் கடவுள் பயமும், பெற்றோருக்கும்—பெரியவருக்கும் கீழ்ப்படிதலும் நமக்கு தெரிகிறது. ஈசாக்குக்கு ஏற்ற மனைவியாக நல்ல துணையாக இருந்ததால்தான் திருமணம் ஆகி 20 ஆண்டுகள் குழந்தை இல்லை. ஆனாலும் ஈசாக்கு வேறு திருமணம் செய்யவில்லை, இதிலிருந்து இருவரும் மிகவும் அன்பான தம்பதியினராக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

ரெபெக்காள் கர்ப்பம் தரித்த போது (ஆதி25:22) வயிற்றில் பிள்ளைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டது.எனக்கு எப்படி ஆகுமோ என்று பெரியவரிடமோ, மனிதரிடமோ விசாரிக்காமல் கர்த்தரிடத்தில் விசாரிக்க சென்றாள்.இதைக் காணும் போது மனிதரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம் (சங்118:8) என்கிற வார்த்தையின்படி, கர்த்தர் மீது அதிக பற்றுதலாய் ரெபெக்காள் இருந்ததைக் காண முடிகிறது. ரெபெக்காள் தனது பிள்ளைகளான ஏசா, யாக்கோபு என்பவர்களிடையே, யாக்கோபிடம் மிகவும் அன்பு செலுத்தினார். அதாவது பிள்ளைகளிடம் வேறுபாடு காட்டியதையும் காணலாம், இதனால் மீண்டும் யாக்கோபையோ, அவரின் குடும்பத்தையோ, பேரப்பிள்ளைகளையோ ரெபெக்காள் காண முடியவில்லை. எனவே நாமும் கூட குடும்பங்களில் பிள்ளைகளிடம் வேறுபாடு இல்லாத அன்பு செலுத்தி, வளர்ப்போம்.

நிறைவாக, அன்பிற்கினியவர்களே ரெபெக்காளிடம் இருந்த மிகுதியான நல்ல குணங்களைப் பின்பற்றி வாழ்வோம், கடவுள் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*

## மன்னா நவம்பர்-25 மீள் பார்வை.....




**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை. நம்பர் மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம் 2-ல் மிரியாமின் துணிச்சலையும், அவரின் நற்குணங்களை பற்றியும் தெளிவாகத் தெரிந்திடவும் நாம் அப்படி வாழ்ந்திடவும், பக்கம் 4-ல் ஆண்டவர் இயேசு அருளின மாபெரும் கிருபைகளை நினைத்து, நம்மை அர்ப்பணித்து வாழ்வோம் என்றும், பக்கம் 5-ல் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் போது நம் வாழ்விலும் அற்புதம் நடைபெறும் என்றும், பக்கம் 6-ல் ஆண்டவர் அன்று தாவீது, ஆகார், பேதுரு ஆகியோரின் கண்ணீரைக் கண்டு பதில் அளித்தார். இன்று நம்முடைய கண்ணீரையும் கண்டு பதில் தருவார் என்றும், பக்கம் 8-ல் ஆண்டவர் இயேசு நமக்கு அளித்த இரட்சிப்பின் விலைக்கிரையம் அது அளவிட முடியாத அன்பின் வெளிப்பாடு என்றும், பக்கம் 9-ல் ஆண்டவர் இயேசுவின் சீடன் பர்த்தலமேயுவின் வாழ்வு நமக்கான சவால் என்றும், திருமறை வினா விடை எழுதி இருப்போர், சிறு பிள்ளைகளின் புதிர்கள், புதிர்களுக்கு பதில் எழுதி உள்ள சிறு பிள்ளைகள், அனைத்து புகைப்படங்களும் சிறப்பு மற்றும் ARTICLE எழுதியுள்ளோர் அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிக்கிறோம். ஆண்டவர் இயேசு ஆசீர்வதிப்பாராக, ஆமென்.**

**இறைப்பணியில்,**

**ஆயர்.**

# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். கடவுளின் பெரிதான கிருபையினால் அவர் பாராட்டினம் பெரிதான அன்பினாலும் கடந்த ஆண்டு முழுவதும் நன்மையும் கிருபையும் நம்மை தொடர்ந்ததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தவும், அவர் செய்த நன்மைகளை நித்தமும் நினைவு கூறுவோம். சொல்லி முடியாத இவங்களுக்காக நம்முடைய கொடுத்த சாட்சிகளுக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். இன்னும் அன்பிலும் பரிசுத்தத்திலும், ஈகையிலும், மற்றவருக்காய் கண்ணீரோடு மன்றாட்டிலும் இன்னும் ஈடுபடுவோம். தேவையில் உள்ளவர்களுக்காய், உடல் நல பாதிப்பு அடைந்தவர்களுக்காக, நல்ல வேலைகாய் காத்திருப்பவர்களுக்காகவும், குழந்தை காய் காத்திருப்பவர்களுக்காகவும், கடன் பிரச்சினைகளை சிக்கித் தவிப்பவர்களுக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம், ஜெப நேரத்தை பெருக்குவோம் தேவனிடத்தில் மன்றாடுவோம்.

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

**நீ பயப்படாதே...” – நம்பிக்கையின் வாக்குத்தத்தம் (ஏசாயா 41:10)**

வாழ்க்கையில் பயம், குழப்பம், தனிமை போன்ற தருணங்கள் வரும் போது, மனிதன் தளர்ந்து போவது இயல்பு. அத்தகைய நேரங்களில் தேவன் தாமே நம்மோடு பேசும் வார்த்தைதான் ஏசாயா 41:10.:

“நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்” என்ற இந்த வாக்கியம், நாம் தனியாக இல்லை என்பதற்கான உறுதியான சாட்சி.

தேவன் நம்மோடு இருப்பதால் நாம் திகைக்க வேண்டியதில்லை. அவர் நம் தேவன்; நம் பலவீனங்களில் நம்மை பலப்படுத்துகிறவர். நம்மால் முடியாத இடங்களில் அவர் சகாயம் செய்கிறார். நாம் சோர்ந்து விழும் போது, அவர் தமது நீதியின் வலது கரத்தினால் நம்மைத் தாங்கி நிறுத்துகிறார்.

இந்த வசனம் ஒரு ஆறுதல் மட்டுமல்ல; அது ஒரு அழைப்பு. பயத்தை விட்டு, விசுவாசத்துடன் முன்னே செல்லுமாறு தேவன் நம்மை அழைக்கிறார். சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும், தேவனின் கை நம்மை ஒருபோதும் விடுவதில்லை.

அதனால் இன்று நாம் தைரியமாகச் சொல்லலாம்

**“என் தேவன் என்னோடு இருக்கிறார்; எனக்கு பயமில்லை.”**




**இறைப் பணியில்**
Mr. Santhosh Kumar
திருச்சபைச் செயலர்

# CHRISTMAS

# கிறிஸ்துமஸ்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள். டிசம்பர் மாதம் என்றாலே கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவருக்கும் சந்தோஷமான மாதம். டிசம்பர் 25 அன்று கிறிஸ்துமஸ் என்று நாட்காட்டி குறிப்பிட்டுள்ளது. அது சரியான தேதிதானா என்பது காரியமல்ல. முதல் கிறிஸ்துமஸ் அன்று திருத்துவத்தின் இரண்டாம் நபர் மனுவுருவெடுத்து உலகில் அவதரித்தாரென்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. சரித்திரத்தையே கிறிஸ்துவுக்குமுன் (கி.மு) கிறிஸ்துவுக்குப்பின் (கி.பி) என இரண்டாகப் பிரித்திருக்கின்றனரே! சரித்திரமே அவர் சரிதைதான்!

நாம் கிறிஸ்துமஸை எப்படிக் கொண்டாடுகிறோம் என்பதுதான் முக்கியம். கிறிஸ்தவ நாடுகள்,சமுதாயங்கள் என்றழைக்கப்படும் பலவற்றில் கிறிஸ்துமஸ் என்றாலே குடிவெறியும் களியாட்டும்தான். பெத்லேகம் பாலகனுக்கு இது எவ்வளவு அவமரியாதை! புத்தாடை உடுப்பதிலும், பல்சுவை உணவு அருந்துவதிலும் தவறேது மில்லை; ஆனால் "இறையரசு என்பது உண்பதும் குடிப்பதுமல்ல; அது பரிசுத்த ஆவியினாலுண்டாகும் மகிழ்ச்சி" என்பதை மறந்துவிடக்கூடாது (ரோ 14:17)

முதல் கிறிஸ்துமஸ் அன்று மேய்ப்பர்கள் "பிள்ளையைக் குறித்த சங்கதிகளை எங்கும் பரப்பினார்கள்!" (லூக் 2:17). கிறிஸ்துமஸ் காலத்தைத் தீவிர நற்செய்திப் பணிக்குச் செலவிடுவோம்! பாட்டுப்பாடிக்கொண்டு கிறிஸ்தவ இல்லங்களுக்கு மட்டும் செல்லாமல் கிராமங்களுக்கும், தெரு மூலைகளுக்கும் சென்று கிறிஸ்தவரல்லாதோருக்குக் கிறிஸ்துமஸ் செய்தியைப் பறைசாற்றுவோம்!

ஏழை பாலகனாய் இவ்வுலகில் உதித்த கிறிஸ்துவின் முதல் வருகையையச் சிறப்பாய் நினைக்கும் நாட்களில் மன்னாதி மன்னராய் வரப்போகிற அவரது இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தபடும்படி 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவரது முதல் வருகையையே அறியாதோரைச் சந்திக்கத் தீவிரிப்போம். "உன்னதத்திலிருக்கிற கடவுளுக்கு மாட்சியுண்டாவதாக" என்று ஒவ்வொரு மக்களினமும், மொழியினரும் முழங்கட்டும்! (வெளி 7:9; லூக் 2:14).

பக்தரே, வாரும்- ஆசை ஆவலோடும்; நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை; வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே, சாஷ்டாங்கம் செய்ய வாரும் இயேசுவை

Article by

**MR. RAJESH ANBU**

Men's Fellowship



# கிறிஸ்துமஸ் & சான்டா கிளாஸ்

## (SANTA CLAUS)



இந்த வருடத்தின் (2025) கடைசி மாதத்தை காணச்செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். டிசம்பர் மாதம் என்றாலே நம் நினைவிற்கு வருவது கிறிஸ்துமஸ் பண்டிகை. யோவான் 3:16ல் கூறப்பட்ட படி, மனிதர்களாகிய நம் மீது தேவன் கொண்ட அன்பின் வெளிப்பாடே கிறிஸ்துமஸ். இயேசுவின் அன்பு அளவிட முடியாதது. கிறிஸ்துமஸ் என்றாலே நம் நினைவுக்கு வருவது கிறிஸ்துமஸ் தாத்தா என்று அழைக்கப்படும் சான்டா கிளாஸ் (Santa claus) தான். இயேசுவின் அன்புக்கு எடுத்துக்காட்டாக சான்டாவை கூறலாம்.

யார் இந்த சான்டா கிளாஸ்?!

கிறிஸ்மஸ் நாளில், அனைவரையும் பரிசு பொருள் தந்து உற்சாகப்படுத்துவது தான் இந்த சிவப்பு அங்கி, வெண் தாடி தாத்தா சான்டா கிளாஸ். பரிசுத்த வேதாகமத்தில் இந்த சான்டா கிளாஸ் பற்றி எங்கும் இல்லை. ஆனால் அன்பை பற்றி நிறைய பார்க்கலாம்.

கிறிஸ்து பிறந்த பினபு 270 வருடத்தில், அந்த காலத்து ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த துருக்கியில், பட்டாரா பகுதியில், லைசியா என்ற துறைமுக ஊரில் பிறந்தவர் இந்த செயின்ட் நிக்கொலஸ். தனது இளம் வயதில் பெற்றோரை இழந்த இவர், ஏழை மக்களுக்கு உதவுவதே கிறிஸதுவின் அன்பை சொல்லும் வழி என்று கருதி அநேக உதவிகள் செய்து வந்தார். கிறிஸ்தவ இறையியல் பணியை செய்த நிக்கொலஸ், லைசியா பகுதியின் பிஷப் பதவியை ஏற்றார். அந்த சமயங்களில், டிசம்பர் 6ம் தேதி சென்று கிறிஸமஸ் பரிசுகளை கொடுப்பார். குழந்தைகளுக்கு பழங்கள், சாக்லெட்டுகள் மற்றும் சிறிய பொம்மைகளை பரிசாக கொடுப்பார். ரோம் நகர பேரரசன் டியாக்கிளிஸ் (Diocles) காலத்தில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்பட்ட போது சிறையில் அடைக்கப்பட்டார். பிள்பு பேரரசன் கான்ஸ்டன்டைன் காலத்தில் விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் ஏழை மக்களுக்கு உதவும் பணியை தொடர்ந்தார். தனது 73ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். நிக்கொலஸ் மக்களிடம் காட்டிய அன்பு, கருணை காரணமாகவும், அவரது தயாள குணத்தின் காரணமாகவும் இன்றளவும் குழந்தைகளின் மனதில் மகிழ்ச்சியை தூண்டும் கிறிஸ்துமஸ் தாத்தாவாக வாழ்ந்து வருகிறார். செயின்ட் நிக்கொலஸ், டச்சு மொழியில், சின்டர்கிளாஸ் என மருவியது. ஆங்கிலம் பேசும் மக்கள் சான்டா கிளாஸ் என்று அழைத்தனர். நிக்கொலஸ் காலத்தில் பிஷப்கள் அணிந்திருந்த சிவப்பு -வெள்ளை அங்கியே நாம் கிறிஸ்மஸ் தாத்தா என்று அழைக்கும் சான்டா கிளாஸின் உடையாகி விட்டது. இயேசுவின் அன்பை உணர்ந்த நாம், சான்டா கிளாஸை கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் பாத்திரமாக பார்க்கலாமே!

உலகம் முழுவதும் டிசம்பர் 25ம் தேதி கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் பண்டிகை இயேசுவின அன்பையும், தியாகத்தையும் அறிந்து கொள்ளும் நாள். நமக்காக பிறந்த பாலகன் வெளி 22:20ல் கூறப்பட்டுள்ள படி சீக்கிரமாய் வரப்போகிறார். அவருடைய வருகைக்காக ஆயத்தப்படுவோம். ஆயத்தப் படுத்துவோம் ஆமென்

Article by

**MRS. MONA PREM**

Women's Fellowship



# நிக்கோதேமு

இயேசு வாழ்ந்த காலத்தில் பரிசேயர்கள் எனப்படும் குழுவினர் அவரை வெகுவாக எதிர்த்தனர். அவர்கள் சட்டங்களை மட்டுமே பிரதானமாகப் பார்த்தவர்கள். அவர்களுக்கு இயேசுவின் சட்டங்களைத் தாண்டிய அன்பின் போதனை பிடிப்பதில்லை. ஆனால் அவர்களில் இயேசுவின் போதனைகளின் பால் ஈர்க்கப்பட்டவர்களும் உண்டு. அவர்களில் ஒருவர் நிக்கோதேமு. பரிசேயரான அவர் இயேசுவின் போதனைகளினால் ஈர்க்கப்பட்டிருந்தார். ஒரு நாள் இரவில் அவர் இயேசுவைத் தேடி வந்தார். “ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாம் அறிவோம். கடவுளின் அருளின்றி இப்படிப்பட்ட செயல்களை யாரும் செய்ய முடியாது” என்றார்.

இயேசு அவருடைய புகழுரையில் மயங்கவில்லை. நேரடியாக நற்செய்தியை அவருக்கு வழங்கினார். “இறையாட்சியைக் காண வேண்டுமானால், ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும்” அந்த செய்தி நிக்கோதேமுக்குப் புதுமையாய் இருந்தது. “மறுபடியும் பிறப்பதா ? பிறந்தபின் எப்படி ஒருவன் மீண்டும் தாயின் வயிற்றுக்குள் போக முடியும்?” நிக்கதேம் கேட்டார்.

“மறுபடி பிறப்பது தாயின் வயிற்றிலிருந்து அல்ல. தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறக்க வேண்டும்” இயேசு சொன்னார். நிக்கதேம் குழம்பினார். இயேசு தொடர்ந்தார், “மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்” என்றார்.

நிக்கதேம் இயேசுவின் போதனையை உற்றுக் கவனிக்க, அவர் தனது வருகையின் மையக் கருத்தைச் சொன்னார். “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.” என்று மீட்பின் செய்தியைச் சொன்னார் இயேசு நிக்கோதேமு குறித்த செய்திகளை யோவான் நற்செய்தியாளர் மட்டுமே தருகிறார். எனவே இந்த நிகழ்ச்சி யோவானின் வீட்டில் நடந்திருக்கலாம் என்பது விவிலிய அறிஞர்களின் கருத்து. இயேசுவைச் சந்திக்கும் முன் நிக்கோதேமு அவரை ஒரு இறைவாக்கினர் என்றே கருதியிருந்தார். ஆனால் இயேசுவுடனான உரையாடல் அவருக்கு இயேசுவை மீட்பராக அடையாளம் காட்டியது.

நாடெங்குமிருந்து தேர்வு செய்யப்பட்ட 70 பேரைக் கொண்ட “சனதரீம் ” எனும் அமைப்பின் உறுப்பினர் நிக்கோதேமு. இயேசுவை கைது செய்ய வேண்டும் என பரிசேயர் கூட்டம் கர்ஜித்தபோது ” ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி

முறையாகுமா?" என தைரியமாக அவர்களிடம் எதிர்த்துப் பேசினார் நிக்கோதேமு. இயேசுவின் மரணத்தின் பிறகு அடக்க நிகழ்விலும் வெளிப்படையாகவே அதில் பங்குகொண்டார்.

நிக்கோதேமு துணிச்சல் மிக்கவர் என்பதையும், இயேசுவின் போதனைகளை உண்மையாகவே நேசித்தார் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். அதனால் தான் மற்ற பரிசேயர்களின் கேள்விகளுக்கு பதிலடி கொடுக்கும் இயேசு, நிக்கோதேமின் சந்திப்பின் போது மிக முக்கியமான "மறு பிறப்பு" பற்றிய மறை உண்மைகளை விளக்குகிறார். நிக்கோதேமு இயேசுவுக்கு ஆதரவாய் இருந்ததால் அவர் பெரும் துன்புறுத்தலுக்கு உள்ளானார். மிகப்பெரிய செல்வந்தராய் இருந்த அவருடைய பொருட்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. வறுமை உந்தித் தள்ள, அவரது மகள் குதிரைக்கு வைக்கும் உணவுகளில் சிந்தியவற்றை பொறுக்கி உண்டு வாழ்ந்து வந்தார். நிக்கதேம், பேதுரு யோவான் ஆகியோரிடம் திருமுழுக்கு பெற்று சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, எளிமையாக மரித்தார். போன்ற செய்திகளெல்லாம் "நிக்கோதேமு நற்செய்தி" எனும் விவிலியத்தில் இடம் பெறாத தள்ளுபடி நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிக்கோதேமின் வாழ்க்கை பல விஷயங்களைக் கற்றுத் தருகிறது.

1.அறியாமைஇருளில் இருப்பவர்கள் ஆர்வத்தோடும், துணிச்சலோடும் இயேசுவிடம் வரும் போது வெளிச்சத்தின் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

2.உலகமே எதிர்த்துநின்றாலும், தனிநபராக இயேசுவிடம் வருபவர்களை இயேசு அன்புடன் வரவேற்கிறார். அவர்களுக்கு மிகப்பெரிய வாழ்க்கை ரகசியங்களை விளக்குகிறார்.

3.புறத்தூய்மைநீரால் அமையும், அகத் தூய்மை திருமுழுக்கினால் நிறைவேறும் என்பதே இயேசு சொல்லும் இரட்டை தூய்மையாதல்.

4.இயேசுவின்போதனைகளை உலக அனுபவங்களைக் கொண்டு புரிய முயல்வது அறிவீனம்.

5.தன்னை நம்பும்எவரும் அழியாமல் காப்பதற்காகவே இயேசு சிலுவையில் உயிர் விட்டார்.

6.நிக்கோதேமு மிகுந்தசெல்வந்தராய் இருந்தார். அவருடைய சுயநல சிந்தனைகளை இயேசு விடுவித்திருந்தார்.

7.சமய ஞானம் அதிகம்கொண்டவராய் இருந்த நிக்கதேம் தன்னைத் தாழ்த்திக் கொண்டு இயேசுவிடம் போதனை பெற வந்தார்.

8.நிக்கோதேமின் கேள்விகள் விமர்சனநோக்கில் இல்லாமல், ஆன்மீக வளர்ச்சிக்காகவே கேட்கப்பட்டன.

9.உண்மையானபோதனையைக் கேட்டதும், தனது பழைய மரபுகளை விட்டு விட நிக்கோதேமுதயங்கவில்லை.

10. அச்சம், தயக்கம், சூழ்நிலை அழுத்தம் என பல இடர்களுக்கு மத்தியிலும் இதயத்தில் கொழுந்துவிட்டெரியும் ஆன்மீக தாகம் கொண்டிருந்தார்.

Article by

**MR. STEPHEN CHELLARAJ**

Men's Fellowship








# ESTHER 1-10
## எஸ்தர் 1-10

1. ராஜ மேன்மையை வேறொரு ஸ்திரீக்கு கொடுக்கச் சொன்னது யார்?
2.அபிமான ஸ்திரீகளை காவல் பண்ணுகிறவன் யார்?
3. ராஜாவின் கஜானாவுக்கு ஆமான் கொடுப்பதாக சொன்ன வெள்ளி எவ்வளவு?
4.எஸ்தரும் தாதிகளும் எத்தனை நாட்கள் உபவாசம் பண்ணினார்கள்?
5. ஆமானின் மனைவியின் பெயர் என்ன?
6.சஞ்சலத்தோடு வீடு திரும்பினவர் யார்?
7. ஆமான் செய்த தூக்கு மரத்தின் உயரம் எவ்வளவு?
8. இந்து தேசம் தொடங்கி எத்தியோப்பியா தேசம் வரையில் உள்ள நாடுகள் எத்தனை?
9. எஸ்தரின் தந்தை பெயர் என்ன?
10. தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானம் உண்டாகப் பேசுகிறவர் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

## நவம்பர்-2025 மாத வினாவிற்கான விடைகள்

*1. நெகே 1:11*
*2. நெகே 2:17,18*
*3. நெகே 3:29*
*4. நெகே 4:17*
*5. நெகே 5:14*
*6. நெகே 6:14*
*7. நெகே 7:69*
*8. நெகே 8:15*
*9. நெகே 9:25*
*10. நெகே 10:33*
*11.நெகே 11:17*
*12. நெகே 12:42*
*13. நெகே 13:16*

## நவம்பர்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்,
திருமதி. ராதிகா செல்வக்குமார்,
திருமதி. ஜோனிஸ் ஹெர்ஷல்,
திருமதி. பிப்லின் நெல்சன்,
திருமதி. ஹேமலதா ஸ்டீபன்,
திருமதி. ஜெமின் ராஜவேல்,
திருமதி. ரோஸ்மேரி.

# SALVATION

Grace and Peace to you all, church members, from our Lord Jesus Christ.

**Salvation: God's greatest gift to humanity**

**Introduction:** Why do we talk about salvation?

In today's world, people chase after many things such as success, recognition, love, and purpose. Yet deep inside, there is a quiet thought that keeps returning:

***Am I truly at peace with God?***

Salvation is not an old religious word. It is the heartbeat of the Gospel - the very reason Jesus came into the world. It's not about rules, but a relationship. Not about religion, but redemption.

**1) What is Salvation?**

Salvation means to be rescued - rescued from sin, guilt, and eternal separation from God. We are all born with sin, separated from the Holy God. But the good news is this - God didn't leave us lost. He sent His Son, Jesus Christ, to pay the price we could never pay.
Salvation is not earned by good works, church attendance, or religious habits.
It is a gift given by God's grace through faith in Jesus.

***"For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord." Romans 6:23***

**2) Why do we need Salvation?**

Many people today think, "I am not that bad, why would I need to be saved?"
But sin is not just about bad behaviour — it's about a broken relationship with God.
Even a small lie, a proud thought, or selfishness separates us from His holiness.
When Jesus died on the cross, He took our punishment — our shame, our sin — and gave us His forgiveness, His peace, and His life in return. That's the beauty of salvation.

**3) How can we receive Salvation?**

The Bible gives a clear and simple answer:

***"If you declare with your mouth, 'Jesus is Lord,' and believe in your heart that God raised Him from the dead, you will be saved." Romans 10:9***

Salvation begins with repentance, faith, and surrender. It's a lifelong relationship.

**Here is a story:**

***The King and the Criminal (Story of Grace and Justice)***

Once there was a righteous king whose law was perfect. One day, his own mother committed a serious crime. The law demanded a heavy fine or severe punishment.
The king was torn — if he forgave her, justice would die; if he punished her, love would die. So, he decided.
He took off his royal crown, came down from the throne, and paid the fine from his own treasure. Justice was satisfied and Love was expressed.
That is exactly what God did for us. He didn't cancel the punishment for sin - He paid it Himself on the cross through Jesus.

***Romans 5:8 says***, God demonstrates His love toward us, in that while we were still sinners Christ died for us. At the cross, Justice and Mercy kissed each other.

Dear friends, no matter who you are or what you have done, Jesus is reaching out to you today.
Salvation is not far away - It's one prayer away.
As believers, let us live as saved people shining the light of Christ in schools, colleges, workplaces and online spaces.

***Let the world see that true freedom is found not in sin, but in the Savior***

Article by,
Mr. Thangaraj Daniel.

### இயேசுவின் சீடன்

# கானானியன் சீமோன்



**பெயர் மற்றும் அதன் பொருள்:**

கானானியன் சீமோன் என்பது இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவராகும். இவரை "ஸீமோன் கானானியன்", "ஸீமோன் வெகுத்தவன் (ZEALOT)" என்றும் அழைப்பார்கள்.

"கானானியன்" என்ற வார்த்தை கானா தேசத்தவர் என்பதல்ல. எபிரேய மொழி QANA → "உற்சாகம் கொண்டவர்". அதனால்: "ஸீமோன் வெகுத்தவனாகிய சீமோன்" என்று பொருள். கிரேக்கத்தில்: SIMON THE ZEALOT.

**பின்னணி:**

இவர் யூதர்கள் ரோமர்களுக்கு எதிராக செயல்பட்ட 'ZEALOT' இயக்கத்துடன் தொடர்புடையவர் என்று பாரம்பரியம் கூறுகிறது. இந்த இயக்கம் யூத மதத்திற்கும் தேசத்திற்கும் மிகுந்த உற்சாகமும், தீவிரத்தையும் கொண்டவர்கள்.

**இயேசுவின் சீடராக அழைக்கப்பட்டார்:**

பைபிளில் இவர் பன்னிரு சீடர்களில் ஒருவராக 4 இடங்களில் வருகிறார்:

- மத்தேயு 10:4
- மாற்கு 3:18
- லூக்கா 6:15
- அப்போ.1:13

இவரைப் பற்றி தனிப்பட்ட சம்பவங்கள் பைபிளில் குறிப்பிடப்படவில்லை.

**பணித்துறையும் சுவிசேஷப்பணி பாரம்பரியங்களும்:**

கிறிஸ்தவ பாரம்பரியங்களின்படி அவர் எகிப்து, பெர்ஸியா (இரான்), அர்மேனியா, சிரியா பகுதிகளில் சுவிசேஷத்தை அறிவித்தார் என கூறுகின்றன. சிலர் அவர் தத்தேயு யூதாவுடன் சேர்ந்து பணிபுரிந்தார் எனவும் கூறுகிறது.

**குணநலன்கள்:**

தீவிரமான யூத தேசிய உணர்வு கொண்டவர். இயேசுவைப் பின்பற்றியபோது அவரது தீவிரம் அமைதிக்காகவும், தேவ ராஜ்யத்திற்காகவும் மாற்றப்பட்டது. முழுமையான அர்ப்பணிப்பும் விசுவாசமும் கொண்ட சீடர்

**மரணம்:**

வேறு வேறு கிறிஸ்தவ மரபுகள் அவரது இறப்பை பற்றி பல கருத்துகளை கூறுகின்றன.

பெரும்பான்மையான மரபு: மர்த்திரர் (சாட்சியாக மரித்தவர்).

சிலர் கூறுவது, பெர்ஸியாவில் கொடூரமாக கொல்லப்பட்டார். சில மரபுகள் இயற்கை மரணம் எனவும் கூறுகின்றன.

**இவர் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது:**

- மனந்திரும்புதல் — சீமோன் முன்பு ZEALOT இயக்கத்தின் தீவிரவாதி. ஆனால் இயேசுவை பின்பற்றியபின் அந்த தீவிரத்தை நல்ல நோக்கத்திற்கும் சுவிசேஷப்பணிக்கும் மாற்றினார்.
- தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்தார் – அழைத்த உடன் இயேசுவைத் தொடர்ந்து சென்றார்.
- ஒன்றுபட்டு வாழ்ந்தார் – கருத்து வேறுபாடு இருந்தாலும் அன்பில் இணைந்தார்.
- அமைதியாக விசுவாசமாக சேவை செய்தார் – பெரிதாக எழுதப்படாவிட்டாலும் நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்.
- தியாக மனம் நிறைந்தவர் – சுவிசேஷத்துக்கு உயிரையும் அர்ப்பணித்தார்

Article by

## MISS. AJINSHA








# NOVEMBER Winners

## Cross Word

- Iniyan Immanuel
- Sherinsha

## Find the Way

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Iniyal Evangeline.

## Kids Colouring

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Iniyal Evangeline
- Shaana Liliya

## Word Search

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Iniyan Immanuel

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**to Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Name:

Date:

Kids Coloring



# THE FRUIT OF THE SPIRIT

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | G | W | T | K | G | Q | T | C | A | D | P | F |
| I | M | F | F | W | K | Y | O | L | X | D | A | I |
| K | C | F | F | Q | L | F | I | Y | O | I | T | V |
| I | I | K | A | O | S | G | L | O | T | V | I | W |
| X | M | Q | I | O | R | Y | E | H | V | S | E | D |
| L | O | R | T | N | O | C | F | L | E | S | N | A |
| W | B | R | S | J | D | U | R | A | I | E | C | H |
| U | J | I | O | B | L | N | T | Z | C | N | E | G |
| J | Y | Z | L | N | J | Q | E | A | R | D | L | L |
| X | B | F | E | M | U | U | E | S | D | O | Y | B |
| Q | Q | S | D | X | U | P | O | Q | S | O | B | T |
| A | S | S | E | N | E | L | T | N | E | G | M | O |
| X | L | G | J | O | M | L | Q | U | P | U | L | N |

Galatians 5:22-23



FAITHFULNESS
GENTLENESS
GOODNESS
JOY
KINDNESS
LOVE

PATIENCE
PEACE
SELF-CONTROL


Name : ............................................................

WORD SEARCH

FIND THE WAY

Name : ..............................................


# Noah's Ark



CROSS WORD

Name : ..............................................................................

## Books of the Bible Puzzle



Unscramble the name of each book of the Bible and write it correctly in the blank.

1. U T R H ________________ (3)
2. T W A M H E T ________________ (5)
3. B O P E R R S V ________________ (5)
4. S U B N E M R ________________ (7)
5. W R E S H B E ________________ (6)
6. U S A J H O ________________ (2)
7. M O R A S N ________________ (1)
8. G E J D S U ________________ (3)
9. S T R E E H ________________ (3)
10. H M O L I P E N ________________ (2)
11. L I N E D A ________________ (5)
12. S E E S I N G ________________ (5)
13. S H E E P I S A N ________________ (2)
14. C L A I M H A ________________ (7)
15. H A R M E E J I ________________ (3)
16. A G H A I G ________________ (6)
17. S N A G I L A T A ________________ (5)

# JANUARY - 2026

| | |
|---|---|
| 02-JANUARY | Ms. Joshika Vashni |
| 02-JANUARY | Mr. A. Prem Jenifer |
| 03-JANUARY | Ms. Johannah |
| 04-JANUARY | Mrs. Helena Santhosh |
| 07-JANUARY | Master. Devon Crastillon |
| 08-JANUARY | Master. Roshan |
| 12-JANUARY | Master. Geovin |
| 16-JANUARY | Master. Abinesh Solomon |
| 17-JANUARY | Mr. Antony Jesu Rajan |
| 17-JANUARY | Ms. Triune Livalle Christopher |
| 18-JANUARY | Mr. John Joseph |
| 19-JANUARY | Master. Kevin |
| 19-JANUARY | Master. D.L. Derrik |
| 20-JANUARY | Master. Abishek Solomon |
| 20-JANUARY | Ms. Shiphrah Shalom |
| 22-JANUARY | Mrs. Philomina |
| 22-JANUARY | Mrs. E.Nancy Angelo |
| 22-JANUARY | Master. Abishua |
| 23-JANUARY | Ms. V. Zia Miren |
| 26-JANUARY | Mr. Divya Venkatesan |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

| | |
|---|---|
| 27-JANUARY | Master. Jonathan Asher |
| 28-JANUARY | Mrs. Sathvikalakshmi |
| 29-JANUARY | Ms. J.V. Achsah Bernice |
| 29-JANUARY | Mr. Thangaraj Daniel |

*"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."*

# JANUARY *Wedding* ANNIVERSARY

**05-JAN** Mr. Jayan Dharmaraj & Mrs. Helen Hemabai

**07-JAN** Mr. R. Paul Gnana Prabu & Mrs. Nirmala Jenifer Paul

**11-JAN** Mr. Belfer John Sigamony & Mrs. Jeyantha

**21-JAN** Mr. C. Havin Heba & Mrs. R. Jackulin Milka

**29-JAN** Mr.. Rajan Prabakaran & Mrs. J. Ajeetha

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

